ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2150/22 - 2019 නොවැම්බර් මස 20 වැනි බදාදා - 2019.11.20
*2150/22 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டம்*

அறிவித்தல் இல. 1

சிவனொளிபாத மலை வாரம் – 2019/2020

மேற்குறிப்பிட்ட யாத்திரைக் கால வாரம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் யாத்திரைக் காலத்தில் செல்லுபடியாகும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

1948, ஏற்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி
1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி
1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி
1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி
1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி
2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி

மாலினி லொகுபோதாகம,
இரத்தினபுரி மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்.

மாவட்டச் செயலகம்,
இரத்தினபுரி.

1 A - G 31509 - 17 (2019/11)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*அறிவித்தல் இல. 2*

***சிவனொளிபாத மலை வாரம் - 2019/2020***

*1948 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி, 1949 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி, 1958 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி, 1961 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி, 1962 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி, 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி ஆகியவற்றின் முதல் யாத்திரைக் காலம் தொடர்பான ஒழுங்கு விதியினை பொது மக்களின் அவதானத்திற்கு செலுத்துகின்றேன். இவ் ஒழுங்குவிதி தொடர்பாக கீழ் குறிப்பிட்ட விடயங்களை அறியத்தருகின்றேன்.*

*01.* ***ஓய்வறை/அம்பலம் என்பது :***

*1. 1.* *லிஹிணிஹெல, பலாபத்தல விகாரை, ஹெரமிடிபான, ஆண்டி அம்பலதென்ன, வர்னாகல, சீதக்குலை, மெதஹின்ன. இந்திகடுபான என்ற ஓய்வறையாக/அம்பலம் தங்குமிடங்களாக உபயோகித்தல் வேண்டும்.*

*1. 2.* *தற்காலிக தங்குமிடங்கள் தயார் செய்தல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.*

*02.* ***கட்டிடங்கள் கட்டுதல் :***

*நான் அல்லது உடந்தையான அலுவலரின் எழுத்துமூல அனுமதியின்றி யாரினாலும் அல்லது 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி முதல் 2020, மே மாதம் 08 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் நிரந்தர அல்லது தற்காலிகக் கட்டிடம், தங்குமிடங்கள், வியாபாரத் தலங்கள் நிறுவக் கூடாது.*

*03.* ***யாசகர்கள்:***

*சிவனொளிபாத ஸ்தலத்தில் அல்லது அம்பலத்தில்/ஓய்வறைப்பகுதியில் எந்தவோர் இடத்திலும் யாசகர்கள் யாசகம் கேட்பது அல்லது பெறல், யாசகம் வழங்குதல் கூடாது.*

*04.* ***குளித்தல் மற்றும் கழுவுதல் :***

*4. 1.* *தற்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மாகாண நிர்வாக ஸ்தாபனங்களூடாக கண்டுபிடிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்களன்றி ஏனைய இடங்களில் குளித்தல் அல்லது துணிகளை கழுவுதல் கூடாது.*

*4. 2.* *தனியார் நிறுவனங்கள் ஊடாக குளித்தல் அல்லது துணி கழுவுவதற்கான இடவசதிகளை வழங்குவதற்குரிய ஏற்பாட்டினை மேற்கொள்ள நினைப்பின் அதற்கான வனப் பாதுகாப்புத் திணைக்களம், மாகாண சபை நிர்வாகத்தினாலும் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சட்டபூர்வமான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*05.* ***வாகனம்/பிரயாணப் பாதை :***

*5. 1.* *பிரதேச சபை அல்லது உரிய மாகாணத்தினால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கு உட்பிரவேசிக்கக் கூடாது.*

*5. 2.* *யாத்திரைக் காலங்களில் ஒதுக்கப்பட்ட பாதைகளைத் தவிர வேறு பாதைகள் நிர்மாணித்தல் அல்லது உபயோகித்தல் கூடாது.*

*06.* ***சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு :***

*6. 1.* *யாத்திரையின் போது பாதையில் அல்லது சிவனொளிபாத மலை சுற்றுப்புறத்தில் அல்லது ஓய்வு சாலை அருகே சுற்றாடலை மாசு படுத்தும் விதமாக பொலித்தின், பிளாஸ்டிக் என்பவற்றை உரிய முறையில் அல்லாமல் அகற்றுதல் கூடாது.*

*6. 2.* *சிவனொளிபாத மலை வனப்பிரதேசத்தினுள் தீப்பிடிக்கும் வகையிலான தீச்சுவாலைகள் ஏற்படுத்தல் கூடாது.*

*6. 3.* *யாத்திரைக் காலத்தில் பக்தர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் குப்பை கூலங்களை அகற்றும் நடவடிக்கையினை மாகாண நிர்வாக சபைகளுக்கு மற்றும் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கு வழங்குகின்றேன்.*

*07.* ***வைத்திய வசதிகள்:***

*தனியார் நிறுவனங்கள் ஊடாக வைத்திய வசதிகள் வழங்குவதற்கு/முதலுதவி மத்தியஸ்தானங்களுக்காக மாவட்ட சுகாதார அத்தியட்சகர்களினால் மாகாண நிர்வாக சபைகளின் முன்னறிவித்தலுடனான எழுத்துமூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.*

08. **வியாபாரம் மற்றும் நன்கொடை :**

8.1. சிவனொளிபாத மலை ஒய்வறைப் பிரதேசங்களில் நடமாடும் வியாபாரம் செய்வது தடை.

8.2. நான் அல்லது என்னால் அனுமதியளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பூஜைப் பொருட்கள், பூஜைக்கான வட்டிகள், உணவுப் பண்டங்கள் அல்லது ஏனைய பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

8.3. மதுபானம், புகைப்பொருள் அல்லது போதைப் பொருட்கள் பிரயாணத்தின்போது எடுத்துச் செல்லல் அல்லது வியாபாரத் தலங்களில் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது உபயோகித்தல் கூடாது.

8.4. உட்பிரவேசிப்பு வீதி ஓரங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்கைளத் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் தற்காலிக அல்லது நிரந்தர வியாபாரத் தலங்களை அமைத்தல் அல்லது நடாத்திச்செல்லல் அல்லது வியாபாரம் செய்யக்கூடாது.

8.5. வியாபாரத் தலங்களிலும், கட்டடங்களிலும் குப்பை கூழங்களை அகற்றுவதற்கான பாத்திரங்களை வைத்திருப்பதுடன் குப்பைகளை அதனுள் இட வேண்டும்.

8.6. வியாபாரத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள எணவுப் பண்டங்களில் ஈக்கள் படியாதவாறு பாதுகாப்பான முறையில் மூடி வைக்க வேண்டும்.

8.7. நன்கொடைகள் (தன்சல்) வழங்கும் பக்தர்கள் அதை மேற்கொள்வதற்காக நான் அல்லது என்னால் அனுமதி வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரினால் ஏற்கனவே அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மாலினி லொகுபோதாகம,
இரத்தினபுரி மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்.

மாவட்டச் செயலகம்,
இரத்தினபுரி.

12 - 63